
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | மே 10, 2018 | புரட்சி 17 | முழக்கம் 17 | விலை: ரூ.3.00

# ‘சி.பி.எஸ்.ஈ.’யின் அடாவடி; அட்டூழியங்கள்!

‘சி.பி.எஸ்.ஈ.’ என்ற பார்ப்பனிய அமைப்பு, ‘நீட்’ தேர்வை அலங்கோலமாக - தான்தோன்றித்தனமாக நடத்தி முடித்திருக்கிறது. தமிழக பெற்றோர்களும் மாணவ மாணவிகளும் கடும் அவமானத்துக்கும் சொல்லொண்ணா துயரத்துக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவராகும் கனவோடு இரவு பகலாக கடுமையாக உழைத்துப் படித்த நமது ஒடுக்கப்பட்ட சமுதாயத்து மாணவ மாணவிகள் தண்டனைக்குள்ளாக்கப்பட்ட கிரிமினல் கைதிகள் சிறைச் சாலைகளில் அடைக்கப்படும்போது நடத்தப் படுவது போன்ற சோதனைகள் அவமானங்களை சந்தித்திருக்கிறார்கள். தமிழ்நாடே இந்திய பார்ப்பனிய இந்துத்துவ ஆட்சியால் தண்டிக்கப்படும் மாநிலமாக மாறியிருக்கிறது. நெஞ்சு பதறும் இந்தக் கொடுமைகள் குறித்து வந்த செய்திகளை இங்கே தொகுத்து தருகிறோம்:



- தமிழ்நாட்டைச் சார்ந்த 5000 மாணவ மாணவிகளுக்கு கேரளா, ராஜஸ்தான் என்ற வேறு மாநிலங்களில் போய் நீட் தேர்வை எழுத சி.பி.எஸ்.ஈ. உத்தரவிட்டது.

- நீட் தேர்வு குறித்த சி.பி.ஸ்.ஈ.யின் தகவல் அறிக்கை - பக்கம் 2 - முக்கிய குறிப்புகளின் கீழ் 6ஆவது அம்சம் மற்றும் 4ஆவது பிரிவு ‘நுழைவுத் தேர்வுக்கான நகர மய்யங்கள்’ என்ற தலைப்பின் கீழ் 4(ஏ) முதல் 4(எச்) வரை இவ்வாறு விரிவாகக் கூறுகிறது:

  “தேர்வு மய்ய ஒதுக்கீடு, கணினி மூலம் செய்யப் படுகிறது. இதில் மனிதக் குறுக்கீடு இல்லை. எந்தச் சூழ்நிலையிலும் வாரியத்தால் தேர்வு மய்யம் மாற்றப்பட மாட்டாது.” இப்படி தெளிவான அறிவிப்புக்குப் பிறகு தமிழ்நாட்டில் தேர்வு மய்யத்தைத் தேர்வு செய்த 5000 மாணவர்களின் தேர்வு மய்யங்கள் எப்படி பிற மாநிலங்களுக்கு மாற்றப்பட்டன? இதற்கு பொறுப்பேற்க வேண்டியது ‘சி.பி.எஸ்.ஈ.’ அல்லவா?

- சென்னை உயர்நீதிமன்றம் தமிழ்நாட்டிலேயே தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும் என்று உத்தரவிட்ட பிறகு சி.பி.எஸ்.ஈ. அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு ஏன் செய்ய வேண்டும்? தனது பார்ப்பனத் திமிருக்கு உச்சநீதி மன்ற பார்ப்பனக் கூடாரம் ஒப்புதல் தந்துவிடும் என்ற நம்பிக்கையில் தானே? அது தான் நடந்தது. தேர்வுக்கு இரு நாட்கள் மட்டுமே இடையில் இருக்கும்போது உயர்நீதிமன்றத் தீர்ப்பை இரத்து செய்து, சி.பி.எஸ்.ஈ. முடிவை நியாயப்படுத்தி, ‘வெளி மாநிலத்துக்கு ஓடு’ என்று நமது மாணவ மாணவிகளுக்கு உச்சநீதிமன்றம் அதிகாரத் திமிரில் ஆணை பிறப்பிப்பது நியாயம் தானா?

- இப்போது கேரள மாநிலம் எர்ணாகுளத்துக்கு தனது மகனை அழைத்துக் கொண்டு தேர்வு எழுதச் சென்ற ஒரு தந்தை, கேரளாவிலேயே பிணமாகி தமிழகத்துக்கு சடலமாக வந்து சேர்ந்திருக்கிறார். திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியை அடுத்த விளாக்குடி கிராமத்தைச் சார்ந்த கிருஷ்ணசாமி, தனது மகன் கஸ்தூரி மகாலிங்கத்துடன் திடீரென உச்சநீதி மன்றத் தீர்ப்பால் எர்ணாகுளம் போக வேண்டிய நிலையில் முன் பயணச் சீட்டு கிடைக்காமல் தொடர் வண்டியில் இரவு முழுதும் நின்று கொண்டே பயணம் செய்து, களைப்புற்று மன அழுத்தத்துக்கு உள்ளாகி, அடுத்த நாள் மகனுடன் தேர்வு மய்யத்துக்குக்கூட உடன் செல்ல முடியாத நிலையில் அறையிலேயே தங்கி அங்கே மாரடைப்புக்குள்ளாகி மரணமடைந்து விட்டார். அனிதா என்ற தங்கையை கடந்த ஆண்டு ‘காவு’ கேட்ட நீட், இப்போது ஒரு மாணவரின் தந்தை உயிரையும் ‘பலி’ கேட்டிருக்கிறது. கிருஷ்ணசாமி, நூலகர். இசை, நடனம் போன்ற கலைகளில் ஆர்வம் கொண்டவர். இரு கால்களையும் இழந்த துணைவியரை ஜாதி மறுப்பு காதல் திருமணம் செய்து கொண்டவர். சதுரங்க விளையாட்டில் ஆர்வம் கொண்ட அவர், தனது மகனை மருத்துவராகவும், சதுரங்க விளையாட்டு வீரராகவும் உருவாக்க தனது வாழ்க்கையையே அர்ப்பணித்தார். குருதி முகாம் நடத்தியவர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓடோடி உதவிக் கரம் நீட்டுபவர். அவரது சொந்த கிராமமே சோகத்தில் அழுது புலம்புகிறது.

- ‘நீட்’டுக்கு விலக்கு கோரும் தமிழக அரசின் சட்டத்தை குப்பைக் கூடையில் வீசி எறிந்த பார்ப்பன நடுவண் ஆட்சியை தட்டிக் கேட்க தொடை நடுங்கிக் கிடக்கும் தமிழக ஆட்சி தேர்வு மய்யங்களை வெளி மாநிலங்களுக்கு மாற்றியதைக்கூட கண்டிக்கத் தயாராக இல்லை. இது தமிழ்நாட்டின் சுயமரியாதைக்கே இழைத்த அவமதிப்பு.

- இதேபோல, சிவகங்கை மாவட்டம் சிங்கணம்புரியைச் சார்ந்த கண்ணன் (44), தனது மகள் அய்ஸ்வர்யாவை மதுரை பசுமலையில் உள்ள மன்னர் திருமலைக் கல்லூரிக்கு நீட் தேர்வு எழுத அழைத்துச் சென்றார். தேர்வு எழுதிய மகள் வெளியே வந்து சரியாக எழுதவில்லை அப்பா என்று கூறியவுடன், அங்கேயே சரிந்து விழுந்து மரணமடைந்துவிட்டார்.

- பண்ருட்டியிலிருந்து புதுச்சேரிக்கு மகளை நீட் தேர்வுக்கு அழைத்து வந்த சீனிவாசன் என்பவரும் மரணமடைந்துவிட்டார். இது இந்த ஆண்டின் மூன்றாவது பலி.

- நாடு முழுவதும் கடுமையான கட்டுப்பாடுகள், சோதனைகளுடன் நீட் தேர்வு நடந்து முடிந்திருக்கிறது. சுமார் 3 மணி நேரம் பெற்றோர் வெயிலில் காத்திருந்தனர்.


- நாடு முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்புகளுக்கான அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கான மாணவர் சேர்க்கையும்கூட தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட்-Neet) அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு முதல் ஆயுர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், சித்தா, ஹோமியோபதி (ஆயுஷ் - Ayush) படிப்புகள் மற்றும் வெளிநாடுகளில் மருத்துவம் படிக்கச் செல்பவருக்கும் நீட் தேர்வு கட்டாயமாக் கப்பட்டுள்ளது.


- அதன்படி, நாடு முழுவதும் 2018-19ஆம் கல்வி ஆண்டுக்கான நீட் தேர்வு மே 6இல் நடந்தது. தமிழ், ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட 11 மொழிகளில் 136 நகரங்களில் 2,255 மையங்களில் நடந்த நீட் தேர்வில் விண்ணப்பித்திருந்த 13 லட்சத்து 26,725 மாணவர்களில் சுமார் 90 சதவீதம் பேர் எழுதியுள்ளதாக கூறப்படுகிறது.

  இதேபோல் தமிழகத்தில் 10 நகரங்களில் 170 மையங்களில் 1 லட்சத்து 7,288 மாணவர்களில், 1 லட்சம் பேர் தேர்வு எழுதினர்.

- காலை 6 மணி முதல் மாணவர் கள் தேர்வு மையத்தின் வாயிலில் காத்திருந்தனர். மையத்தின் வாயில் மற்றும் உள்பகுதி என 2 இடங்களில் மெட்டல் டிடெக்டர் மூலம் சோதனைக்கு பின்னரே தேர்வு எழுத மாணவர்கள் அனுமதிக்கப் பட்டனர். குறிப்பாக மாணவிகளை பொது

(4ஆம் பக்கம்)





**தலையங்கம்**

# ‘சி.பி.எஸ்.ஈ.’ வெளியேறட்டும்!

‘சி.பி.எஸ்.ஈ.’ என்ற பார்ப்பன கல்வி அமைப்பு, தமிழ்நாட்டில் சமூக நீதியால் கல்வி பெற்று உயர்ந்து மேலே வரத் துடிக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ-மாணவி யர்களை ‘நீட்’ தேர்வு நடத்துவதற்கு தனக்குக் கிடைத்துள்ள உரிமையைப் பயன் படுத்தி அவர்களை அவமானப்படுத்தியிருக் கிறது; சொத்தடிமைகளாக நடத்தியிருக் கிறது.

‘சி.பி.எஸ்.ஈ.’க்கு தேர்வு நடத்தும் உரிமையே கிடையாது என்று 2013ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் ‘நீட்’ வழக்கு வந்தபோது, அப்போது தலைமை நீதிபதி யாக இருந்த அல்டாமஸ் கபீர் தலைமை யிலான நீதிபதி அமர்வு தீர்ப்பளித்தது.

அண்மையில் நடந்த ஒரு நிகழ்வை நினைவுபடுத்த வேண்டும். ‘சி.பி.எஸ்.ஈ.’ 10ஆம் வகுப்பு கணித வினாத்தாளும் 12ஆம் வகுப்பு பொருளாதார பாடத்துக்கான வினாத்தாளும் முன்கூட்டியே ‘அவுட்’ ஆகிவிட்டன. இதைத் தொடர்ந்து பல இலட்சம் மாணவர்கள் மீண்டும் அதே தேர்வை எழுதும் நிலைக்குத் தள்ளப்பட் டனர். பெற்றோர்களையும் மாணவர்களை யும் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கி யது ‘சி.பி.எஸ்.ஈ.’. அந்த அமைப்புக்குள்ளே ஊடுருவியுள்ள ஊழல் பெருச்சாளிகள் தான், இந்த வினாத்தாள் வெளியாவதற்குக் காரணம். இது குறித்து ‘எக்னாமிக்அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’ எழுதிய தலையங் கத்தில் (ஏப். 2018) இவ்வாறு கூறியிருந்தது:

“இப்படி வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது ‘சி.பி.எஸ்.ஈ.’ அமைப்பில் நிலவும் ஊழல் முறைகேடுகளின் வெளிப் பாடாகும். தனது கட்டுப்பாட்டிலுள்ள 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளின் மாணவர் களுக்கு, அவர்களின் கல்வித் திறனை மதிப்பீடு செய்து சான்றிதழ்களை வழங்கக் கூடிய ஓர் உயர் நிறுவனம் என்ற மதிப்புக்குரிய அமைப்பே இப்போது ஊழல் கண்காணிப்பு வளையத்துக்கு உள்ளாகி நிற்கிறது. தேர்வுக்கான வினாத்தாள் மாணவர்கள் கரங்களில் சென்றடையும் நேரம் வரை பாதுகாக்கப்பட வேண்டிய இரகசியத்தைக் காப்பாற்றத் தவறி, அதன் நம்பகத் தன்மையையும் அடிப்படையான கடமையையும் இழந்து நிற்கிறது சி.பி.எஸ்.ஈ.” என்று எழுதியது.

அதைத் தொடர்ந்து சி.பி.எஸ்.ஈ. இயக்குனர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பதவி விலகி விசாரணையை சந்திக்க வேண்டும். மத்திய மனித வளத்துறை அமைச்சரும் பதவி விலக வேண்டும் என்று நாடு முழுதும் எதிர்ப்புகள் வந்தன. உச்சநீதி மன்றத்தில் பொது நலன் வழக்குகளும் தொடுக்கப்பட்டன. ஆனால் அப்போதும் உச்சநீதிமன்றம் ‘மறு தேர்வு நடத்துவதா வேண்டாமா என்பதை சி.பி.எஸ்.ஈ. தான் முடிவு செய்ய வேண்டும்; உச்சநீதிமன்றம் தலையிடாது” என்று கூறிவிட்டது. சி.பி.எஸ்.ஈ., இந்திய மருத்துவ கவுன்சில் என்பவை யெல்லாம் உச்சநீதிமன்றத்தின் செல்லப் பிள்ளைகள். எந்த முறைகேடு களுக்கும் அவைகளுக்கு அனுமதி கிடைத்து விடும்.

இப்படி வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மாணவர் பிரிவான ஏ.பி.வி.பி.யின் ஜார்கண்ட் மாநில சத்ரா மாவட்டச் செயலாளரும், பயிற்சி நிறுவனம் நடத்தி வருபவருமான சத்தீஸ்குமார் பாண்டே எனும் பார்ப்பனரும், ஏ.பி.வி.பி.யின் மற்றொரு நிர்வாகியான பங்கத் சிங் என்பவரும் கைது செய்யப்பட்டனர். மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் வீட்டை மாணவர்கள் முற்றுகையிட்டனர்.

சி.பி.எஸ்.ஈ. உயர் மட்ட பார்ப்பன அதிகாரிகளுக்கும் பயிற்சி மய்யம் நடத்தும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளுக்கும் இடையே நிலவும் கள்ள உறவு - இதன் மூலம் அம்பலமானது.

கடந்த ஆண்டு மாநிலத்துக்கு மாநிலம் வெவ்வேறு வினாத்தாள்களை தயாரித்து, கடும் எதிர்ப்புக்குப் பின் இனி இந்தத் தவறுகள் நடக்காது என்று கூறியது சி.பி.எஸ்.ஈ. இந்த ஆண்டு 5000 தமிழக மாணவர்களை வெளி மாநிலத்தில் தேர்வு எழுத துரத்தி அடித்துவிட்டு, கணினியில் நடந்த கோளாறு என்று அலட்சியமாகக் கூறியதோடு உச்சநீதிமன்றம் வரைப் போய் தனது ‘தவறு’க்கு ஆதரவாக உத்தரவையும் பெற்று, தனது அதிகார செல் வாக்கை திமிருடன் வெளிப்படுத்தியது.

2017ஆம் ஆண்டு நடந்த ஒரு சம்பவத்தையும் நினைவுபடுத்துகிறோம். 2017ஆம் ஆண்டு மே மாதம் சி.பி.எஸ்.ஈ. நடத்திய 12ஆம் வகுப்புக்கான தேர்வில், 2000 மாணவர்களுக்கான விடைத் தாள் களில் மதிப்பெண் வழங்குவதில் மிகப் பெரும் ஊழலை திட்டமிட்டு நடத்தி னார்கள். 2000 மாணவர்களுக்குக் 26க்கும் மேற்பட்ட மதிப்பெண்கள் கூட்டலில் கூடுதலாக வாரி போடப்பட்டன.

மொத்தம் தேர்வு எழுதியவர்களில் 2.47 சதவீதம் பேருக்கு இப்படி கூடுதல் மதிப்பெண்கள் போடப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. மதிப்பெண் கூட்டலில் நடந்த இந்த மோசடியை ‘மூடி மறைக்க’ சி.பி.எஸ்.ஈ. பார்ப்பன அமைப்பு 3 பேர் அடங்கிய விசாரணைக் குழு ஒன்றை அமைத்தது. அத்துடன் தனது மூத்த அதிகாரிகளைக் கொண்ட மற்றொரு விசாரணைக்கும் உத்தரவிட்டது. டெல்லியில் சி.பி.எஸ்.ஈ. மண்டல அதிகாரியாக இருந்த எஸ்.எஸ். ராவர்ட் தலைமையில் விசாரணை நடந்தது. அவர் பல தேர்வு மய்யங்களுக்கு நேரில் சென்று ஆய்வு நடத்தி மதிப்பெண் கூடுதலாக போடப்பட்டதை உறுதி செய்தார்.

அதுவும்கூட மத்திய மனித வளத்துறை அமைச்சகம், கல்வித் துறை செயலாளர் அனில் சுவரூப், சி.பி.எஸ்.ஈ. தலைவர் ஆர்.கே. சதுர்வேதி (பார்ப்பனர்) ஆகியோரை அவசரமாக அழைத்து ஏதேனும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்திய பிறகு தான் இந்த நடவடிக்கைகளை சி.பி.எஸ்.ஈ. எடுத்தது.

மதிப்பெண் வழங்குவதில் முறைகேடுகள் நடந்தது உண்மை என்று விசாரணைக் குழுக்கள் உறுதிப்படுத்தின. அவ்வளவுதான். சி.பி.எஸ்.ஈ.யில் ‘தற்காலிகப் பணி நீக்கம்’ என்ற சில கண்துடைப்பு நடவடிக்கைகளை மட்டும் எடுத்துவிட்டு பிரச்சினையை மூடி மறைத்துவிட்டனர். இப்படி சி.பி.எஸ்.ஈ. முறைகேடுகளை ஏராளமாக பட்டியலிட லாம். ‘இவாள்கள்’ ஒன்றும் ‘புனிதப் பசுக்கள்’ அல்ல; ஊழல் பெருச்சாளிகள்.

தமிழ்நாட்டில் நீட் தேர்வு கூடாது என்பது தான் தமிழர்களின் அடிப்படை யான கோரிக்கை. ‘நீட்’ தேர்வை தமிழகத் திலிருந்து விரட்டும் வரை தமிழர்கள் ஓய மாட்டார்கள். ஒவ்வொரு ஆண்டும் நடக்கும் நீட் தேர்வுகள் இந்த உணர்வை மேலும் மேலும் தீவிரமாக்கியே வருகின்றன.

நீட் தேர்விலிருந்து தமிழகத்தை விலக்க வேண்டும்; இல்லையேல் தமிழகம் இந்தியாவிலிருந்து விலக்கிக் கொள்ளும். அந்த நிலையை உருவாக்கிட வேண்டாம்!

# நியூட்ரினோ திட்டத்தால் உருவாகும் நீர் நெருக்கடிகள்

நியூட்ரினோ ஆய்வு கூடம் அமைக்கும் திட்டத்துக்கு மத்திய சுற்றுச் சூழல் ஆணையம் அனுமதி அளித்துள்ளதோடு, ‘இந்தத் திட்டத்துக்கு முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தினமும் 3 இலட்சத்து 40 ஆயிரம் லிட்டர் தண்ணீர் பயன்படுத்திக் கொள்ளலாம்’ என்றும் அனுமதி அளித்துள்ளது. இது முல்லைப் பெரியாறு அணையை நம்பி உள்ள விவசாயிகளுக்கு வெந்த புண்ணில் வேலை பாய்ச்சியதுபோல் உள்ளது.

இங்கிலாந்து பொறியாளர் கர்னல் ஜான் பென்னி குவிக் என்பவரால் கட்டப்பட்ட முல்லைப் பெரியாறு அணை பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகிறது. தமிழக-கேரள இடையேயான உறவில் விரிசல் ஏற்படுத்துவதற்கான காரணமாகவும் இந்த அணைப் பிரச்சினை மாறி உள்ளது. 152 அடி உயரம் கொண்ட இந்த அணையின் நீர்மட்டம் கடந்த 1979 ஆம் ஆண்டு 136 அடியாக குறைக்கப்பட்டது. அணை பலவீனமாக இருப்பதாகவும், அணையை பலப்படுத்தும் பணி மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறி நீர்மட்டம் குறைக்கப்பட்டது.

பலப்படுத்தும் பணி முடிந்த பின்னர், கேரள அரசு நீர்மட்டத்தை உயர்த்த விடாமல் முட்டுக்கட்டை போட்டது. நீர்மட்டம் 136 அடியாக குறைக்கப் பட்டதால் விவசாயம் கடும் பாதிப்பை சந்தித்தது. கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் மூன்று போகம் விளைந்த சுமார் 14 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இருபோக சாகுபடியாக மாறியது. திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்கள் பஞ்சத்தையும், வறட்சியையும் சந்தித்தது.

இந்த நீண்டகால பிரச்சினைக்கு 2014ஆம் ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புதான் தீர்வைக் கொடுத்தது. நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்றும் பேபி அணையை பலப்படுத்திவிட்டு நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்றும் உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியது.

ஆனால், தீர்ப்பு வந்து 4 ஆண்டுகள் ஆகிறது. நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்தவும், பேபி அணையை பலப்படுத்தும் பணியும் இன்னும் மேற் கொள்ளப்படவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை யில், சில ஆண்டுகளாக சீரற்ற மழைப் பொழிவு, வறட்சி போன்றவற்றால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் ஒரு போக சாகுபடியே நடக்கவில்லை. நடப்பு ஆண்டில் இரண்டாம் போக சாகுபடியும் நடக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில், மதுரை மாநகராட்சி மக்களின் குடிநீர் தேவைக்காக முல்லைப் பெரியாறு அணையில் லோயர் கேம்ப் பகுதியில் இருந்து தண்ணீர் எடுத்துச் செல்வதற்கு ரூ.1295 கோடி மதிப்பில் சிறப்பு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஏற்கனவே, விவசாயத்துக்கும், குடிநீருக்கும் போதிய தண்ணீர் கிடைக்காமல் தேனி மாவட்ட மக்கள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், மதுரைக்கு குடிநீர் கொடுக்கும் திட்டத்துக்கே எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்தாமல், அணையில் இருந்து ஒரு நாளைக்கு 3 இலட்சத்து 40 ஆயிரம் லிட்டர் தண்ணீரை நியூட்ரினோ திட்டத்துக்குப் பயன்படுத்துவது என்பது இருக்கும் நீரையும் பறித்துக் கொடுக்கும் முயற்சி என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். இதனால், மாவட்டத்தில் வறட்சி மற்றும் குடிநீர் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

## கழகத் தோழர் ராஜி ஆங்கில பயிற்சிப் பள்ளி திறப்பு விழா

திராவிடர் விடுதலைக் கழகத்தின் வடசென்னை மாவட்டக் கழகத் தோழர் ராஜி-சாரதி இணையர் களின் ‘கிருஷ்ணா அகாடெமி’ என்ற ஆங்கில வழி பயிற்சிப் பள்ளியை 3.5.2018 அன்று தொடங்கினார். (கிருஷ்ணா என்பது ராஜி அவர்களின் ஆசிரியர் பெயர்)

திறப்பு விழா நிகழ்வில் தென் சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர் மா. வேழவேந்தன், தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார், வடசென்னை மாவட்டத் தலைவர் ஏசுகுமார் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். திறப்பு விழா நிகழ்வாக பத்ரி நாராயணன் நினைவுச் சுவடுகள்’ நூலை மாவட்டத் தலைவர் மா.வேழவேந்தன் வழங்கினார். விழா மகிழ்வாக தோழர்கள் ராஜி-சாரதி, கழக வார ஏட்டிற்கு ரூ.2000/- நன்கொடை வழங்கினர்.

# கல்வி வேலை வாய்ப்பு உரிமை கோரி தமிழ்நாடு மாணவர்க் கழகம் ஆர்ப்பாட்டங்கள்

**திருப்பூரில் :** திருப்பூர் 02-05 2018 புதன்கிழமை காலை 11 மணி அளவில் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பாக தமிழக மாணவர்களின் கல்வி வேலை வாய்ப்பு உரிமை மீட்பு ஆர்ப்பாட்டம் திருப்பூர் மாநகராட்சியின் முன்பு நடைபெற்றது.




1) தமிழக அரசு இயற்றிய 'நீட்' விலக்கு தொடர்பான சட்ட மசோதாவுக்கு இசைவு கோரியும்,

2) கட்டாய கல்வி உரிமைச் சட்டப்படி தனியார் பள்ளிகளில் 25% மாணவர் இடஒதுக்கீட்டை முறையாக நடைமுறைப்படுத்தக் கோரியும்,

3) பட்டியலின பழங்குடி மாணவர்களின் பொறியியல் படிப்பைத் தடுக்கும் அரசாணை 51,52 யை இரத்து செய்து முன்பு இருந்ததுபோல அரசாணை92 ஐ நடைமுறைப்படுத்தக் கோரியும், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

கோரிக்கை மனு ஆட்சியர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் தேன்மொழி (மாவட்ட அமைப்பாளர் - டிஎஸ்எப்), தமிழ் செழியன் (டிஎஸ்.எப்.), மதுலதா (டிஎஸ்.எப்.) ஆகியோர் உரையாற்றினர்.

வீ. சிவகாமி (தலைவர், தமிழ்நாடு அறிவியல் மன்றம்), முகில் இராசு (மாவட்ட தலைவர் திவிக), நீதிராசன் (மாவட்டச் செயலர் திவிக), பிரசாந்த் (புற நகர் கழக செயலாளர் - டிஎஸ்.எப்), கனல் மதி (மாநகர செயலாளர் டிஎஸ்எப்), அரிசுகுமார் (டிஎஸ்.எப்-மாவட்ட அமைப்பாளர்), தினேசுகுமார், சிபு அர்ஜூன், பார்த்திபன், மனோராகுல் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

**ஈரோட்டில் :** தமிழக மாணவர்களின் கல்வி வேலைவாய்ப்பு பறிபோவதை கண்டித்து மத்திய மாநில அரசுகளை கண்டித்தும் ஈரோடு மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




வீரப்பன் சத்திரத்தில் 02.05.2018 அன்று நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு பாபிரபாகரன் (புறநகர் அமைப்பாளர் த.மா.க) தலைமை தாங்கினார். ராபிரபு (மாவட்ட அமைப்பாளர் த.மா.க) முன்னிலை வகித்தார். சீரா. சௌந்தர், அபிரதாப், பாரதி கண்டன உரைக்குப் பிறகு, இனியன் நன்றி கூறினார்.

**பொள்ளாச்சியில் :** தமிழக மாணவர்களின் கல்வி, வேலை வாய்ப்புரிமை பறிப்பினைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 5-5-18 மாலை 5 மணிக்கு பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில், தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் சபரிகிரி தலைமையேற்றார். திராவிடர் கழக செயற்குழு உறுப்பினர் திபரமசிவம், திமுக நகரத் துணைச் செயலாளர் ந.கார்த்திகேயன், திராவிடர் விடுதலைக் கழகப் பொறுப்பாளர் வெள்ளிங்கிரி, தமிழ்நாடு திராவிடர் கழக ஒருங்கிணைப்பாளர் காசு. நாகராசன், நேதாஜி இளைஞர் பேரவைத் தலைவர் வெள்ளை நடராஜ், தென்னை தொழிலாளர் பேரவை ஒருங்கிணைப்பாளர் ர.கருப்புசாமி, தமிழ்நாடு மாணவர் மன்றம் அமைப்பாளர் தினேசு குமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.




**சென்னையில் :** தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் பறிபோகும் தமிழக மாணவர்களின் கல்வி, வேலை வாய்ப்புரிமை பறிப்பினைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 05.05.2018 மாலை 4 மணிக்கு ,சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் அருகில் நடைபெற்றது. மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் இளவரசன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்திற்கு விடுதலை இராசேந்திரன் (பொதுச் செயலாளர், திவிக) இயக்குனர் கௌதமன், பாரி




சிவக்குமார் (மாநில அமைப்பாளர், தமிழ்நாடு மாணவர் கழகம்), லயோலா மணி (தமிழ்நாடு மாணவர் இளைஞர் கூட்டமைப்பு), அப்துல் ரஹீம் (தமிழ்நாடு மாணவர் முன்னணி), ஜாவித் ஜாபர் (மாநில பொருளாளர்), மாணவர் இந்தியா, காஸ்ஸாலி மீரான் (கேம்பஸ் ப்ரண்ட் ஆப் இந்தியா), செம்பியன் (தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு), குர்ஷீத் (சமூகநீதி மாணவர் இயக்கம்), வி.அன்பழகன் (தமிழ்நாடு தேசிய இயக்கம்), ஷீலா (தமிழ்நாடு மாணவர் இயக்கம்) ஆகியோர் கண்டன உரையாற்றினர். மத்திய மாநில அரசுகளைக் கண்டித்தும், கல்வி, வேலை வாய்ப்புரிமையை மீட்கவும் முழக்கமிட்டனர். தமிழ்நாடு மாணவர் கழக மாநில அமைப்பாளர் பாரி சிவக்குமார் ஒருங்கிணைத்தார். ஆர்ப்பாட்டத்தில் சென்னை திவிக தோழர்கள், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகரன், அய்யனார், சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், குகன், கரு. அண்ணாமலை, உள்ளிட்ட கழகத் தோழர்கள் 50 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். பொதுச்செயலாளர், இயக்குனர் கவுதமன் ஆகியோரின் கண்டன உரையை அடுத்து 7.30மணிக்கு ஆர்ப்பாட்டம் முடிவுற்றது.

## கர்நாடக தேர்தலில் அவிழ்த்து விடப்படும் பா.ஜ.க.வின் பொய்க் கதைகள்

கர்நாடகத்தில் ஆட்சியைப் பிடிப்பதற்காக, பிரதமர் மோடி மற்றும் அக் கட்சியின் தலைவர் அமித்ஷா துவங்கி அத்தனை பேரும் பொய்யை விதைத்து வருகின்றனர். வேளாண் விளைபொருட்களுக்கு ஒன்றரை மடங்கு விலை தருவோம் என்பது, 2014 நாடாளுமன்றத் தேர்தலில் மோடி அளித்த வாக்குறுதி. ஆனால், இப்போது வரை அது நடக்கவில்லை. ஆனால், கர்நாடக தேர்தல் அறிக்கையில் மீண்டும் அதே வாக்குறுதி மீண்டும் வழங்கப்படுகிறது. நாடு முழுவதும் விவசாயிகள் சுபிட்சமாக இருக்கிறார்கள்; கர்நாடகத்தில் மட்டும்தான் விவசாயிகள் நிலை மோசமாக இருக்கிறது என்று மோடி பிரச்சாரம் செய்திருக்கிறார். ஆனால், இந்தியாவிலேயே விவசாயிகள் தற்கொலை அதிகம் நடந்த மாநிலங்கள் என்றால், அது பா.ஜ.க. ஆளும் மகாராஷ்டிரம்தான். அடுத்தடுத்த இடங்களிலும், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், குஜராத், உத்தரப்பிரதேசம் ஆகிய பா.ஜ.க. மாநிலங்கள்தான் இருக்கின்றன. முன்பு, கேரளத்திற்குச் சென்ற போதும் சுகாதாரத்துறையில் நாட்டிலேயே உத்தரப்பிரதேசம்தான் முதலிடத்தில் இருக்கிறது என்று ஆதித்ய நாத்தும், அமித்ஷாவும் பச்சைப் பொய் சொல்லி மாட்டிக் கொண்டார்கள். அந்த வகையில், உயிரோடு இருக்கும் ஒருவரை இறந்துவிட்டதாக, கர்நாடகத் தேர்தல் பிரச்சாரத்தில் பா.ஜ.கவினர் கதைக் கட்டிவிட்டது தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளது.

பா.ஜ.கவைச் சேர்ந்தவர் சட்ட வல்லுநர் ஷோபா கரண்ட்லஜே. இவர், மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு 2015இல் நடந்த வன்முறை சம்பந்தமாகக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில், மதக் கலவரத்தால் இறந்த 23 பா.ஜ.க-வினரின் பெயர் உள்ளிட்ட முழு விவரங்களையும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தார். இறந்துபோனதாகக் கூறப்பட்ட அந்த 23 பேர்களில் அசோக் பூஜாரி என்பவரும் ஒருவர். இவர், வேலை முடிந்து வீடு திரும்பும்போது பைக்கில் வந்த மர்ம நபர்கள், காவி நிறத் துண்டை தலையில் கட்டியதற்காக அவரைக் கொலை செய்ததாக கூறியிருந்தார். தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியும், கர்நாடகத்தில் பாஜக-வைச் சேர்ந்த 23 தொண்டர்கள், மதத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டு இருப்பதாகவும், சித்த ராமையா அரசு இதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் ஆவேசம் காட்டிப் பேசினார். இது விவாதத்தைக் கிளப்பி விட்டது. ஆனால், மதக்கலவரத்தில் இறந்ததாக கூறப்பட்ட பாஜக தொண்டர் அசோக் பூஜாரி உயிருடன் வந்து பாஜக-வினரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறார்.

பா.ஜ.கவினரால் 'இறப்புச் சான்றிதழ்' அளிக்கப்பட்ட, அசோக் பூஜாரி உடுப்பி மாவட்டத்தில் உள்ள கிராமத்தில் 'உயிருடன்' இருப்பதை ஆங்கில தனியார் தொலைக்காட்சி நிறுவனம் உறுதி செய்துள்ளது. 'நான் உயிருடன்தான் இருக்கிறேன்' என்று பூஜாரி கூறும் வாக்குமூலத்தையும் வெளியிட்டுள்ளது. பா.ஜ.கவினரின் பொய், அதிலும் பிரதமர் மோடியே துணிந்து சொன்ன பொய் அம்பலப்பட்டு இருக்கிறது. அரசி யலில் எந்தளவிற்கு பா.ஜ.க. கீழிறங்கும் என்பதற்கு இது சாட்சியாகவும் மாறியிருக்கிறது. பா.ஜ.கவின் வெட்கங்கெட்ட தனத்தை ஊடகங்கள் தோலுரித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், ஷோபா கரண்ட்லஜே எழுதிய கடிதத்தின் அடிப்படையிலேயே தாங்கள் பேசியதாகவும், அசோக் பூஜாரி உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது நிரூபிக்கப்படாத ஒன்றுதான் என்றும் பா.ஜ.கவினர் மழுப்பி வருகின்றனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘நீட்’டுக்கு மூன்று உயிர்கள் பலி

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் வைத்து சோதனை செய்தது அனைவரையும் முகம் சுளிக்க வைத்தது. இதற்கு பெற்றோர் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர்.

- மாணவிகள் அணிந்து வந்திருந்த கம்மல், மூக்குத்தி, கொலுசு, வளையல்கள் அகற்றப் பட்டன.

- மாணவிகளின் தலைமுடிகளை களைந்தும் காதுகளில் டார்ச் லைட் அடித்தும் சோதனை செய்தனர். கடுமையான கட்டுப்பாடுகளாலும் சோதனைகளாலும் மன உளைச்சலுக்கு ஆளான மாணவ, மாணவிகள் பதற்றத்துடனேயே தேர்வு எழுதினர். 9.30 மணிக்கு பின்னர் ஒரு நிமிடம் தாமதமமாக வந்தவர்களுக்கும் அனு மதி மறுக்கப்பட்டது. இதனால் பல இடங்களில் அதிகாரிகளுடன் வாக்குவாதமும் போராட்டமும் நடைபெற்றது.

- சென்னையில் 49 மையங்களில் தேர்வு நடை பெற்றது. பெரும்பாலும் திருச்சி, மதுரை, தஞ்சாவூரைச் சேர்ந்த மாணவர்களுக்கு சென்னையில் தேர்வு மையங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. கோபாலபுரத்தில் உள்ள தனியார் பள்ளி யில் அமைக்கப்பட்டிருந்த மையத்தில் அதிகாரிகள் ஆதார் கார்டு இருந் தால் மட்டுமே அனுமதிக்கப்படும் என்று தெரிவித்தனர்.

  இதனால் அதிர்ச்சி அடைந்த மாணவர்களும் பெற்றோர்களும் “ஹால் டிக்கெட் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மட் டும் கொண்டுவர வேண்டும். மற்ற எதுவும் தேர்வு மையத்துக்குள் அனுமதியில்லை என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. பின் எதற்காக ஆதார் கார்டு கேட்கிறீர்கள் ” என வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதன் பிறகே மாணவர்கள் அனுமதிக்கப் பட்டனர்.

- கேரள மாநிலம் மலப்புரத்தைச் சேர்ந்த அஹிசா என்ற மாணவிக்கு சென்னை கோபாலபுரம் தனியார் பள்ளியில் தேர்வு மை யம் ஒதுக்கப்பட்டிருந்தது. தந்தை ஷாஜியுடன் மலப்புரத்தில் இருந்து சென்னைக்கு ரயிலில் வந்தார். அதிகாலை 5.40 மணிக்கு வர வேண்டிய ரயில், அரக்கோணத்தில் நடக்கும் தண்டவாளம் சீரமைப்பு பணியால் தாமதமாக காலை 9.40 மணிக்கு வந்தது. அங்கிருந்து காரில் தேர்வு மையத்துக்கு 9.50 மணிக்கு வந்தார். ஆனால், அவரை அனுமதிக்க அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

- அங்கிருந்த பொதுமக்கள் எவ்வளவு சொல்லியும் சாலை மறி யல் போராட்டம் நடத்தியும் அனுமதிக்கவில்லை. இதனால் தேர்வு எழுத முடியாமல் மாணவி கதறி அழுத சம்பவம் பார்ப்பவர்களை கண்கலங்க வைத்தது.

- இதேபோல் கோவையைச் சேர்ந்த மாணவர் அர்ஷாத் அக மது என்பவருக்கு சென்னை திருமங்கலத்தில் உள்ள தனியார் பள்ளியில் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டிருந்தது. 9.35 மணிக்கு வந்த மாணவரை 5 நிமிடம் தாமதமாகி விட்டது என்று கூறி தேர்வு மையத்துக்குள் அனுமதிக்க மறுத்துவிட்டனர். இதனால் அந்த மாணவர் கண் கலங்கியபடி சென்றார்.

- மதுரை நரிமேடு நாய்ஸ் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் 720 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத காலை 9.30 மணிக்கு அனுமதிக்கப்பட்டனர். அனைவருக்கும் வினாத்தாள்கள் தேர்வு கண்காணிப்பாளரால் வழங்கப்பட்டன. இதில் 120 பேருக்கு வழங்கப்பட்ட வினாத்தாள்கள் தமிழ், ஆங்கிலத்தில் இல்லாமல் இந்தி மொழியில் இருந்தன. இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த மாணவர்கள் தேர்வு கண்காணிப்பாளரிடம் புகார் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து தேர்வு மைய அதிகாரிகள் மாற்று ஏற்பாடுகளை செய்து தமிழ், ஆங்கிலம் வினாத்தாள்களை வழங்கினர். இதனால் 5 மணி நேர தாமதத்துக்குப் பிறகே மாணவர்கள் தேர்வை எழுதத் தொடங்கினர்.

  இவர்கள்தான் தொடர் வண்டி தாமதத்தால் சில நிமிடங்கள் தாமதமாக வந்த மாணவ மாணவியை தேர்வு எழுத அனுமதி மறுத்தவர்கள்.

- மாணவ மாணவிகளுக்கு நேர்ந்த இவ்வளவு அவமானம் அலைக் கழிப்புகளைவிட சில மாணவர்களின் ‘பூணூலை’ அகற்றச் சொன்னதுதான் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ போன்ற ஏடுகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அணிகலன்கள் எல்லாவற்றையும் நீக்கச் சொன்ன சோதனையாளர்கள், **‘புனித நூலான பூணூலை’யும்கூட** அகற்றச் சொல்லி விட்டார்கள் என்று பதறுகிறது, அந்த ஏடு.

- மத்திய தேர்வாணையம் - தமிழக தேர்வாணையம் - வேலைவாய்ப்பு வாரியங்கள் எத்தனையோ தேர்வுகளை நடத்துகின்றன. எந்தத் தேர்வுக்கும் இப்படி ஒரு கெடுபிடி அவமானங்கள் நடப்பது இல்லை. அப்படி என்ன சி.பி.எஸ்.ஈ. நேர்மையின் சிகரமா? இதே ‘சி.பி.எஸ்.ஈ.’ மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் படிக்கும் மாணவர்களைவிட உயர் கல்வியில் அதிக இடங்களைப் பெற வேண்டும் என்பதற்காக முறைகேடாக மதிப்பெண்களை வாரிப் போட்டது. அந்த ஊழல் அம்பலமாகி, சி.பி.எஸ்.ஈ. மாணவர்களின் தேர்வையே நிறுத்தி வைத்தது என்பது கடந்தகால வரலாறு.

- சி.பி.எஸ்.ஈ.க்கு இத்தகைய தேர்வுகளை நடத்தும் தகுதியோ, அனுபவமோ கிடையாது என்று தமிழக பள்ளிக் கல்வித் துறையில் தேர்வுத் துறை இயக்குனராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற கே.தேவராஜன் கூறியிருக்கிறார். “மாநில அரசின் கல்வித் துறையோடு சி.பி.எஸ்.ஈ. கலந்து பேசுவதோ, ஒத்துழைப்பதோ இல்லை. ஆனால் மத்திய தேர்வாணையம் - ஆசிரியர் தேர்வு வாரியங்கள் - மாநில கல்வித்துறை ஒத்துழைப்போடுதான் தேர்வுகள் நடத்துகின்றன” என்று சி.பி.எஸ்.ஈ.யின் பார்ப்பனத் திமிரை தோலுரித்துள்ளார்.

- கடந்த ஆண்டைவிட 31 சதவீத மாணவர்கள் இவ்வாண்டு ‘நீட்’ தேர்வு எழுதியிருக்கிறார்கள். இதைக் காரணம் காட்டி, ‘நீட்’ தேர்வை மாணவர்கள் ஆதரிப்பதாக பா.ஜ.க. தலைவர்கள் கூறுவது பம்மாத்து வாதம். ஆயுர் வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், சித்தா, ஓமியோபதி உள்ளிட்ட ஆயுஸ் படிப்புகளுக்கும் ‘நீட்’ கட்டாயப்படுத்தப்பட்டதே இதற்குக் காரணம்.

**– நமது செய்தியாளர்**

**(‘சி.பி.எஸ்.ஈ.’யின் ஊழல் முறைகேடுகள் – உள்ளே தலையங்கம்)**

# ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தில் புனித பாண்டியன் சிறப்புரை

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டம் 4ஆவது சந்திப்பு ஏப்ரல் 30, 2018 அன்று மாலை 6 மணிக்கு விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. அண்மையில் முடிவெய்திய ஸ்டீபன் ஹாக்கிங்ஸ் படத்தை விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்தார்.

நிகழ்வில் ‘நிமிர்வோம்’ ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாத இதழ்களில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளைக் குறித்து தங்களது பார்வைகளை தோழர்கள் ஜெயபிரகாஷ், மதன்குமார், துரை, அருண், கார்த்திக், இராசேந்திரன் ஆகியோர் எடுத்துரைத்தனர். அதைத் தொடர்ந்து இந்நிகழ்வில் அம்பேத்கர் காண விரும்பிய சமூக ஜனநாயகம் என்ற தலைப்பில் புனித பாண்டியன் (‘தலித் முரசு’ ஆசிரியர்) சிறப்புரையாற்றினார்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கட்டுரைகளைக் குறித்து தோழர்கள் கேட்ட கேள்விகளுக்கு தெளிவான விளக்கத்தைக் கூறினார். இதில் 35க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

# ‘நீட்’டுக்கு ராஜஸ்தான் போவது வெளிநாட்டுப் பயணத்தையும் மிஞ்சும்

ஒரு தமிழக மாணவர் ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூருக்கு நீட் தேர்வு எழுத செல்லும் தூரத்திற்கு, இரண்டுமுறை கனடாவில் இருந்து அமெரிக்கா சென்று மீண்டும் கனடா திரும்பலாம். மருத்துவம் பயில விரும்பும் மாணவர்களுக்கு கட்டாய நுழைவுத் தேர்வான நீட் தேர்வு, இந்தியா முழுவதும் ஞாயிறன்று (மே 6) நடைபெற்றது. நீட் தேர்வில் இருந்து விலக்கு கோரும்தமிழகத்தின் முயற்சி தோல்வியில் முடிந்தது. தற்போது மேலும் ஓர் இடியாகப் பல தமிழக மாணவர்களுக்கு, ராஜஸ்தான், கேரளா, சிக்கிம் போன்ற மாநிலங்களில் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டது. சேலத்தைச் சேர்ந்த ஒரு மாணவர், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள தேர்வு மையத்திற்குச் சாலை வழியாகச் சென்றால் 2,232 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டும். சென்னையில் இருந்து வான் வழியாக செல்ல வேண்டும் என்றால், சேலத்தில் இருந்து சாலை வழியாக 339 கிலோ மீட்டர் பயணித்து சென்னை வர வேண்டும். பிறகு சென்னையில் இருந்து 1,606 கிலோ மீட்டர் வான் வழியாகப் பயணித்து ஜெய்ப்பூர் செல்ல வேண்டும். இதற்கு கிட்டத்தட்ட 2,000 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டும். அதேபோல சென்னையைச் சேர்ந்த ஒரு மாணவர் சிக்கிம் மாநிலத்தில் உள்ள தேர்வு மையத்திற்கு 2,343 கிலோ மீட்டர் பயணித்துச் செல்ல வேண்டும். இந்தியா பரப்பளவில் மிகப் பெரிய நாடாக இருப்பதால், சராசரியான இந்த 2,000 கிலோ மீட்டர் என்பது ஒரே நாட்டிற்குள் இருக்கிறது. இதுவே உலகின் வேறு பகுதிகளில் 2,000 கிலோ மீட்டர் பயணம் என்பது பல நாட்டு எல்லைகளைக் கடக்கும் பயணமாக இருக்கும். தமிழகத்தில் இருந்து ஜெய்ப்பூருக்கும், சிக்கிம் தலைநகர் கேங்டாக்கிற்கும் பயணம் செய்யும் தூரத்தை வேறு சில நாடுகளில் இருந்து மேற்கொள்ளும் பயணமாக இருந்தால், அது எப்படி இருக்கும்?

சில எடுத்துக்காட்டுகள்: கனடா நாட்டின் தலைநகரான ஒட்டாவாவில் இருந்து, அமெரிக்காவின் தலைநகர் நியூயார்க்கிற்கு 540 கிலோ மீட்டர். ஒரு தமிழக மாணவர் ராஜஸ்தான் செல்லும்தூரத்தில், இரண்டு முறை ஒட்டாவாவில் இருந்து நியூயார்க் சென்று திரும்பலாம். வட கொரியாவின் தலைநகரான பியாங்யாங்கில் இருந்து சீனத் தலைநகர் பெய்ஜிங்கிற்கு 808 கிலோ மீட்டர். சீனாவில் இருந்து இரண்டு மணி நேர விமானப் பயணத்தில் பியாங்யாங் சென்றுவிடலாம். சென்னையில் இருந்து சிக்கிம் சென்றால் 2,343 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டும். ஆனால், 2,424 கிலோ மீட்டரில் பெய்ஜிங்கில் இருந்து பியாங்யாங் சென்று திரும்பி, மீண்டும் ஒரு முறை பியாங்யாங் சென்றுவிடலாம். ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இருந்து ஐரோப்பிய நாடான ஜெர்மனியின் ஹம்பர்க் நகரத்திற்கு 1,800 கிலோ மீட்டர் பயணத்தில் சென்றுவிடலாம்.

அதே போல், 1808 கிலோ மீட்டரில் சென்னையில் இருந்து சிங்கப்பூர் சென்றுவிடலாம். பிரிட்டன் தலைநகர் இலண்டனில் இருந்து, ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டுக்கு 1,263 கிலோ மீட்டர் தூரம். சென்னையில் இருந்து சிக்கிம் செல்லும் தூரம், லண்டனில் இருந்து மாட்ரிட் சென்று மீண்டும் லண்டன் திரும்பும் தூரத்துக்கு சமம். இந்திய தலைநகர் தில்லியில் இருந்து சவூதி அரேபியாவின் தலைநகரான ரியாத்திற்கு 3051 கிலோ மீட்டர். இந்தியாவில் இருந்து பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளை கடந்து சவூதி அரேபியாவிற்கு செல்ல வேண்டும். சென்னையில் இருந்து ஜெய்ப்பூருக்குச் சென்று நீட் தேர்வு எழுதிவிட்டு மீண்டும் சென்னை வந்து சேரும் தூரம் இது. பிரேசில் நாட்டின் தலைநகர் பிரேசியாவில் இருந்து, அர்ஜெண்டினா தலைநகர் ப்யூனாஸ் அயர்சுக்கு செல்லும்தூரமும், சென்னையில் இருந்து சிக்கிம் செல்லும் தூரமும் கிட்டத்தட்ட சமம். தென் ஆப்பிரிக்க தலைநகரான கேப்டவுனில் இருந்து, ஜிம்பாப்வே தலைநகர் ஹராரேவுக்கு 2,180 கிலோ மீட்டர். இடையில் போஸ்ட்வானா என்ற நாட்டைக் கடந்து செல்ல வேண்டும். இது சென்னையில் இருந்து ஜெய்ப்பூர் செல்லும் தூரம். மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து இந்தோனேசியா தலைநகர் ஜகார்த்தாவுக்கு விமானத்தில் பயணித்தால் 1,120 கிலோ மீட்டர். சென்னையில் இருந்து ஜெய்ப்பூருக்கு விமானத்தில் பயணித்தால் 1600 கிலோ மீட்டர்.

**செய்தி: பிபிசி தமிழ்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 11th May 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN